**ஐக்கிய அமெரிக்க மில்லேனியம் சாலன்ஞ் கோப்பரேஷன் (Millennium Challenge Corporation), அபிவிருத்தி உடன்படிக்கைகளின் முன்னோடி அபிவிருத்திச் செயற்பாடுகளிற்கு 1.1 பில்லியன் இலங்கை ரூபாயை அறிவித்தல்**

கொழும்பு, ஜுலை 27 : ஐரோப்பா, ஆசியா, பசுபிக் மற்றும் இலத்தீன் அமெரிக்காவின் பிராந்தியத் துணைத் தலைவர் ∴பெதிமா Z. சுமரின் தலைமையிலான அமெரிக்க அரசாங்கத்தின் **Millennium Challenge Corporation**இன் (MCC) பிரதிநிதிகள் குழு ஒன்று இலங்கையர்களிற்கான பொருளாதார வாய்ப்பினை ஊக்குவித்தல் மற்றும் வறுமை ஒழிப்பு ஆகிய நோக்கங்களிற்காக இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து அபிவிருத்தி உடன்படிக்கைகளின் முன்னோடி அபிவிருத்திச் செயற்பாடுகளிற்கான ஐந்தாண்டு மானியத் திட்டம் ஒன்றிற்காக இன்று கொழும்பிற்கு வருகை தந்துள்ளது.

“ஒரு முதலீட்டுத் திட்டத்தை ஆதரிக்க சாத்தியமான முதலீட்டிற்கான குறிப்பிட்ட திட்டங்களை அடையாளம் காணும் மற்றும் பகுப்பாய்வு செய்வது உட்பட அபிவிருத்தி உடன்படிக்கைகளிற்கு தற்போது மிலேனியம் சவால் கூட்டுத்தாபனம் ஆதரவளிப்பதனை வழங்கிக் கொண்டிருக்கின்றது என்றும் அந்த நிதியுதவியில் 1.1 பில்லியன் இலங்கை ரூபாயினை வழங்குவதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்’’ எனவும் சுமர் தெரிவித்துள்ளார்.

ஏனெனில் இந்த உடன்படிக்கைகள் இன்னமும் அபிவிருத்தியில் உள்ளன, உடன்படிக்கைகளிற்கான மொத்த நிதித் தொகை இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. நிதியுதவியில் 7.4 மில்லியன் ரூபாயானது MCC உடன்படிக்கையின் நிதித்தொகைக்கு மேலதிகமாக உள்ளது.

பொருளாதார வளர்ச்சிக்கான கட்டுப்பாட்டுப் பகுப்பாய்வின் அடிப்படையில், MCC மற்றும் இலங்கை அரசாங்கம் தற்போது போக்குவரத்து மற்றும் நிலப்பகுதிகளில் உள்ள சாத்தியமான திட்டங்களில் கவனத்தைச் செலுத்துகின்றன.

இலங்கை அரசாங்கம் MCC உடன்படிக்கையுடன் இணைந்து பணியாற்றுவதற்கு பிரதமர் அலுவலகத்திற்குள் இலங்கை அபிவிருத்தி உடன்படிக்கைக் குழு என்னும் ஒரு செயற்றிட்ட முகாமைத்துவ அலகு ஒன்றினை நிறுவியுள்ளது. பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும் வகையில் வளர்ச்சியைத் தூண்டும் மற்றும் வறுமையினைக் குறைக்கும் வகையில் உயர்ந்த தரம், ஆதார அடிப்படையிலான மற்றும் நிலையான உடன்படிக்கைகளை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. கடுமையான மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு மூலம் MCC பங்குதார நாடுகள் பெறுப்புடைமை வாய்ந்தவையாக விளங்குகின்றன.

இலங்கை அபிவிருத்தி உடன்படிக்கைக் குழுவானது சாத்தியமான பயனாளிகள், சிவில் சமுதாயம், தனியார் துறை, பிற நன்கொடையாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்கள் உட்பட உள்ளீடுகளைச் சேகரிப்பதற்கு ஒரு பரந்த பங்குதாரர் குழுவினருடன் ஆலோசனை வழங்குகின்றனர்.

2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், MCC இன் பணிப்பாளர் சபையானது அபிவிருத்தி உடன்படிக்கைகளை மேம்படுத்துவதற்கு இலங்கையைத் தெரிவு செய்துள்ளது. இலங்கை MCC இன் ஒப்பந்த உடன்பாட்டுப் பெறுபேற்று அட்டையில் 20 குறிகாட்டிகளிற்கு 13 இனைப் பெற்று சித்தியடைந்த பின்னர் உதவிக்கான தகுதியினைப் பெற்றது.

MCC இன் பணிப்பாளர் சபையினால் டிசம்பர் மாதம் அபிவிருத்தி உடன்படிக்கைகளைத் தொடருவதற்காக இலங்கையானது மீள்தெரிவு செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

MCC பற்றிய மேலதிக தகவல்களை www.mcc.gov என்னும் இணையத்தள முகவரியினூடாக வாசித்து அறிந்து கொள்ளவும்.

# # #